**தெஹியத்தகண்டிய பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியத்தகண்டிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 16,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் கணக்கு வைக்கப்பட்டிராமையால் ஆண்டின் வருமானம் இந்த பெறமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முத்திரைக் கட்டணமாக பெற வேண்டிய ரூபா 77,000 தொகை கணக்கு வைக்கப்பட்டிராமையால் நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது 49 கடைகளை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட பிணை வைப்புக்களான ரூபா 7,350,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராமையால் பொறுப்புகள் அந்த பெறுமதியால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 25,523,500 பெறுமதியான தெஹிஅத்தகண்டிய இடுகாடு 2016 பெப்ரவரி 03 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராமையின் காரணத்தால் நிலையான சொத்துக்கள் அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட்ட 02 செயற்திட்டங்களுக்குரிய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ரூபா 896,594 தொகை

தொழிற்சாலை கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிராமையால் பொறுப்புகள் அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) லிஹினியாகம கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பிளாஸ்டிக் துண்டாக்கும் இயந்திரத்தை பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்திற்குரிய பணிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிராத போதிலும், தொழற்சாலை கடன் கொடுத்தோராக ரூபா 1,000,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்தமையால், பொறுப்புகள் அந்த பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டில் தெஹிஅத்தயகண்டிய வாரச்சந்தை கட்டிடத்தினை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் அந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளாமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 58,000 தொகையான விலைக்கேள்வி பிணைமுறிகள் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பிரதேச சபை விதி 180 மற்றும் 181 | -- | சபையின் வருமானங்களைச் சேகரித்தல், களஞ்சிய கட்டுப்பாடு, காசோலை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | -- | சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 1,698,000 | கணனி மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,587,392 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,095,504 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரியும் வரியும் | 1,544 | 1,596 | 1,116 | 2,264 | 1,579 | 1,624 | 2,481 | 1,784 |
| (ii) | வாடகை | 8,118 | 8,830 | 8,351 | 521 | 5,926 | 5,836 | 5,805 | 42 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,441 | 1,804 | 1,815 | 20 | 1,346 | 1,565 | 1,595 | 32 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,833 | 2,306 | 2,198 | 188 | 2,308 | 1,743 | 1,766 | 80 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 16,474,513 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 13,480,299 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமானம் சேகரித்தல் 82 சதவீதமான மட்டத்தில் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

2011 ஆம் ஆண்டின் ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிலுவை வீதவரி பதிவேட்டிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள’ளபடியான நிலுவை வீதவரி ரூபா 2,264,129 ஆக இருந்ததுடன், நிலுவைப் பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

---------------

2017 திசெம்பர் 31 இல் நிலவிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 521,085 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய செலுத்தப்படாத அனுமதிப்பத்திர கட்டணமாக ரூபா 20,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 188,500 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 77,000 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சந்துன்புற கிராமோதய சபை மற்றும் நாமல் ஓயா பிரதேச சபைக்கும் முறையே ரூபா 25,000 மற்றும் ரூபா 15,000 தொகையான வழங்கப்பட்ட முற்பணங்கள் 2018 ஆம் ஆண்டு வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமாக ஓட்ட நிலையிலுள்ள 20 வாகனங்களில் 10 வாகனங்களுக்காக மாத்திரம் வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 7 வாகனங்களுக்காக வாகன அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) தெஹிஅத்தகண்டிய வாரச்சந்தை புனரமைக்கும் செயற்திட்டத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றாமையின் அடிப்படையில் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 58,000 தொகையான விலைக்கேள்வி பிணைப்பொறுப்பு 2018 மே 23 ஆந் திகதி வரையிலும் காசாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

--------------------------------------

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் 08 பதவிகளுக்காக 11 உத்தியோகத்தர்களின் வெற்றிடமொன்று நிலவியது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 07 கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அதற்காக ஆண்டினுள் அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணமான ரூபா 21,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 05 கடைகளுக்காக மாதாந்த வாடகை அறவிடல் 2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றிருந்ததுடன்,

புதிய மதிப்பீட்டு பெறுமதிகளின் அடிப்படையில் வருமானம் பெறுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளாமை

சபைக்கு சொந்தமான 10 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும், அந்த வாகனங்கள் பழுதுபார்க்கப்படாது சபையின் வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபை, அரச சார்பற்ற அமைப்பு மற்றும் நிதி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட 06 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாவலி அதிகாரசபையினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த மொத்த நிலப்பரப்பு 32.67 ஏக்கர்கள் அளவான 26 விளையாட்டுத் திடல்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹாவலி அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்த இடுகாடாக பயன்படுத்தப்படும் மொத்த நிலப்பரப்பு 37.9 ஏக்கர்கள் பரப்புடைய 34 காணித்துண்டுகள் மற்றும் காணியின் அளவினை அளவிடாது 2 காணித்துண்டுகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 39,500,094 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தெஹிஅத்தகண்டிய நீச்சல் குளம் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே 23 ஆந் திகதி வரையிலும் பிரதேச மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.4 வாகனப் பயன்பாடு

சபைக்கு சொந்தமான ரூபா 6,009,602 பெறுமதியான டிப்பர் வண்டி ஓட்ட நிலையில் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டினுள் 150 கிலோ மீட்டர்கள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 09 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடாமை.<br>ii. உப விதிகள் விதிக்கப்பட்டிராமை.<br>iii. வருமான மூலங்களை இனங்காணாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | பொருட்களை களஞ்சியப்படுத்தல் உரிய முறையில் இடம்பெறாமை. |
| (உ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்காமை. |
| (ஊ) கணக்கீடு | சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராமை. |